# காசநோய்க் கட்டுப்பாடு (சமூகத்தொண்டர் வழிகாட்டி)

காசநோய்க்ககட்டுப்பாடும் மார்பு நோய்களுக்ககுமான தேசிய செயற்திட்டம்
சுகாதார அமைச்சு இலங்கை
சனவரி 2005

மின்வடிவம்: Tuberculosisjaffna.com


## வடிவமைப்பு:

**வைத்தியகலாநிதி பிரபா ஜகோட்டா (இந்தியா)**
**வைத்தியகலாநிதி வெஸ்ஸாமிற்றா ஆர் வீரரட்ன (இலங்கை)**


## காசநோய் என்றால் என்ன?

காசநோய் அல்லது ரி.பி (TB) என்பது பக்டீரியா நுண் கிருமிகளால் ஏற்படும் நோய் ஆகும். சுவாசத்தின் மூலம் இந்த நோய்க்கிருமிகள் உடலின் உள்ளே செல்கின்றன. பொதுவாக காசநோய் சுவாசப்பையைத் தாக்குகின்றது. சுவாசப்பையில் (நுரையீரலில்) ஏற்படும் காசநோய் (Pulmonary Tuberculosis) என்று அழைக்கப்படும். உடலின் எந்தப்பகுதியிலும் காசநோய்க் கிருமிகள் தாக்கியிருக்கக் கூடும். சரியான சிகிச்சையின் மூலம் காசநோயைக் குணப்படுத்த முடியும். முறையான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் காசநோயால் இறக்க நேரிடும்.

***காசநோய் நுண் கிருமிகளால் தொற்றும் ஒரு நோயாகும். காசநோயாளி ஒருவரின் சுவாசப்பையிலிருந்து மிக இலகுவாக் காசநோய் கிருமிகள் பரவுகின்றன.***

## காச நோயின் அறிகுறிகள் எவை

1) காசநோய்க்கிருமி சுவாசப்பையில் இருக்குமெனில் நீண்ட நாட்களுக்குத் தொடர்ச்சியான இருமல் ஒரு முக்கியமான அறிகுறியாக இருத்தல்



(2 முதல் 3 கிழமைகளுக்கு மேல்)

2) காசநோய் அறிகுறிகள் உடலின் எந்தப்பகுதியில் நோய்க்கிருமிகள் உள்ளன. என்பதில் தங்கியிருக்கும். மெல்லிய காய்ச்சல் இரவில் வியர்த்தல் என்பன காசநோயின் பொதுவான அறிகுறிகளாகும்.



இரவில் வியர்த்தலுடனான காய்ச்சல்

3) நோயாளியிடமிருந்து அதிகளவு சளி வெளியேற்றப்படும். அதில் இரத்தம் சேர்ந்திருக்கலாம்.



சளியுடன் இரத்தம் வெளியேறல்

4) உடல் நிறை குறைவடைதல், சாப்பாட்டில் விருப்பமின்மை,களைப்பு என்பன இதர பொதுவான நோய் அறிகுறிகளாகும்.


உடல் நிறை குறைதல், களைப்படைதல்.

5) சுவாசப்பையில் காசநோய் ஏற்பட்டிருந்தால் மார்பில் வலி ஏற்படுவது அடுத்த பிரதான அறிகுறியாகும்.


மார்பில் வலி

காசநோய்க்கான சில அறிகுறிகள் வேறு நோய்களுக்கான அறிகுறிகள் போன்றனவாகும். எனவே குறித்த நபர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுவது முக்கியமானதாகும்.

***காசநோய் ஏற்பட்டுள்ளவர்களுக்கு பல்வேறு சிதமான அறிகுறிகள் இருக்கக்கூடும். சுவாசப்பையில் காசநோய் உள்ளவர்களுக்கு 2 முதல் 3 கிழமைகளுக்கு மேல் தொடர்வது பிரதானமான அறிகுறியாகும். இதனால் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுவது மிகச்சிறந்ததாகும்.***

## காசநோய் எப்படிப் பரவுகிறது?

சுவாசப்பையில் காசநோய் இருப்பது, மற்றவர்களுக்கு ஆபத்தானதாகும். ஏனெனில் அது ஒருவரிலிருந்து மற்றவருக்கு இலகுவாகத் தொற்றுகிறது. காசநோயாளியான ஒருவர் மூக்கு, வாய்ப்பகுதியை மூடாது இருமும் போதும், தும்மும் போதும் காசநோய்க்கிருமிகள் காற்றில் விசிறப்படும். அந்தக் காற்றை இன்னொருவர் சுவாசிக்கும் போது நோய்க்கிருமிகள் அவரது சுவாசப்பைக்குள் சென்றுவிடுகின்றன. குடும்ப உறுப்பினரகள் ஒரே அறையில் வசிக்கும் போது அவர்களுக்கு கிருமித்தொற்று ஏற்கட இது இலகுவாகின்றது. காற்றோட்ட வசதி குறைவான வீட்டில் பலர் வசிக்கும் போது இந்தத் தொற்றும் தன்மை அதிகமாகின்றது. போதியளவு சுத்தமான காற்று இல்லாதவிடத்து எவருக்கும் காசநோய் ஏற்படக்கூடும்.



*காசநோய் உள்ள ஒருவர் தும்மும் போது அல்லது இருமும் போது காசநோய்க்கிருமிகள் அடுத்தவருக்குப் பரப்பப்படுகின்றது.*

## காசநோய் நிர்ணயம் எப்படிச் செய்யப்படுகின்றது?

- ❖ சுவாசப்பையில் ஏற்பட்டுள்ள காசநோயைக் கண்டு பிடிப்பதற்கு, சளியின் மாதிரியை நுணுக்குக்காட்டியில் வைத்துப் பரிசோதிப்பது சிறந்த முறையாகும். நுணுக்குக்காட்டியில் காசநோய்க்கிருமியைப் பார்க்க முடியும்.
- ❖ திருத்தமான நோய் நிர்ணயத்துக்காக மூன்று சளிமாதிரிகள் நுணுக்குக்காட்டியில் பரிசோதிக்கப்பட வேண்டும்.
- ❖ காசநோய் நிர்ணயத்தில் x கதிர் பரிசோதனையானது, அதிக செலவுடையதும் குறைவான சாதகத்தன்மையுடையதுமாகும். ஆனால் சில நோயாளர்களுக்கு அவசியமானதாகும்.

- ❖ ***நுரையீரல் காசநோயைக் கண்டறிவதற்கு நுணுக்குக்காட்டியில் சளிமாதிரியைப் பரிசோதித்தல் மிகச் சிறந்த முறையாகும்.***
- ❖ ***மூன்று சளிமாதிரிகள் பரிசோதிக்கப்படல் வேண்டும்.***

## காசநோயைக் குணப்படுத்த முடியுமா?

**ஆம்**

***நோயாளியானவர் நேரடி அவதானிப்புச் சிகிச்சை முறை நிருவகிப்பின் கீழ் குறித்த காலம் முழுவதும் சிபாரிசு செய்யப்படும் மருந்துகளை ஒழுங்காக உட்கொள்வாரேயானால் காசநோயைக் குணப்படுத்த முடியும்.***

## காசநோயாளியானவர் சரியான மருந்துகளை, முழுமையான நிகிச்சைக் காலத்துக்கு உட்கொள்வது ஏன் முக்கியமானது?

காசநோய்க்கிருமிகளைக் கொல்லும் மருந்துகள் காசநோய் மருந்துகள் என்று அழைக்கப்படுகின்றன. சிறிது காலம் அந்த மருந்துகளை உள்ளெடுக்கும் போது சுகமடைந்து விட்டதாக உணரத் தோன்றினாலும் நோயாளிகள் காசநோய்க்கான மருந்துகளை ஒழுங்காக ஒவ்வொரு நாளும் தவறாமல் முழுமையான சிகிச்சைக் காலத்துக்கு உள்ளெடுப்பார்களேயானால் காசநோயைக் குணப்படுத்த முடியும். இந்த மருந்துகள் நேரடி அவதானிப்பின் கீழ் வழங்கப்படல் வேண்டும்.

சரியாகக் குணப்படுத்தப்படா விட்டால் காசநோய் மரணத்தை ஏற்படுத்தும். காசநோயாளிகள் உரிய காலத்துக்கு உரிய மருந்துகளை உட்கொள்ளாவிட்டால் அவர்கள் தமது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நோயைப் பரப்புபவர்களாக இருப்பார்கள். சில மருந்துகளை மட்டும் எடுப்பது, அல்லது முழுமையான காலத்துக்கும் பூரணமாக மருந்துகளை உட்கொள்ளாது விடுவதானது காசநோயைக் குணப்படுத்தாது. சிகிச்சையை சரியாக தொடராமை, சில காச நோய் மருந்துகளை மட்டும் உட்கொள்ளலுமானது ஆபத்தானதாகும். காரணம் நோய் குணப்படுத்தப்பட முடியாததாகிவிடும்.

## நேரடி அவதானிப்புச் சிகிச்சை (DOT) என்பது என்ன?

சிகிச்சைக்கான மருந்துகளின் ஒவ்வொரு மாத்திரையும் சுகாதார உத்தியோகத்தர் அல்லது சமூகத் தொண்டர் ஒருவரது நேரடி அவதானிப்பின் கீழ் நோயாளியால் உள்ளெடுக்கப்பட வேண்டும். (விசேடமாக முதல் இரண்டு மாத கால தீவிர அவத்தையில்)

***காசநோயாளி ஒருவர், சமூகத் தொண்டர் ஒருவரது நேரடி அவதானிப்பின் கீழ் (DOT) ஒழுங்காக, உரிய நேரத்தில் முழுமையான சிகிச்சைக் காலத்துக்கும் மருந்தை உட்கொள்வது முக்கியமானதாகும். இல்லையேல் நோயை ஒருபோதும் குணப்படுத்த முடியாது.***

## யார் “டொட்” வழங்குனர்?

காசநோயாளி ஒருவர் தமக்குரிய காசநோய் மருந்துகளின் ஒவ்வொரு மாத்திரையையும் சரியாக விழுங்குகின்றாரா என்று கவனிக்கும் (அவதானிப்பவர்) எந்த நபரும் ‘‘டொட்’’ வழங்குனர் ஆவார்.

## எல்லா காசநோயாளிகளும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டுமா?

இல்லை, அனேகமாக காசநோயாளர்கள் காசநோய் மருந்துகளை ''டொட்'' முறையின் கீழ் கொடுப்பதன் மூலம் வீட்டிலேயே சிகிச்சையளிக்கப்படக் கூடியவர்கள். நோயைக் குணப்படுத்துவதற்கு சுகாதார சேவையாளரின் ஆலோசனைப்படி மருந்து உட்கொள்வது முக்கியமானதாகும். சில மிகக் கடுமையான நோயாளர்கள் மட்டும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவர். காசநோய் பரவுதலைத் தடுப்பதற்காக நோயாளியைத் தனிமைப்படுத்தும் பொருட்டு வைத்தியசாலையில் அனுமதிப்பது அவசியமானதல்ல.

## காசநோய் பரவுவதை ஒரு காசநோயாளியால் எப்படித் தடுக்க முடியும்?

- இருமும் போதும் தும்மும் போதும் (படத்தில் காட்டியபடி) மூக்கு வாய்ப்பகதியை மூடிக்கொள்ளல்.
- காசநோயை முற்றாகக் குணப்படுத்த ஒழுங்காக, பூரணமாக மருந்தை உட்கொள்ளுதல். இதனால் காசநோய்க்கிருமிகள் கொல்லப்படுவதுடன் அவை காற்றில் பரவுதலும் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் சமூகத்தவர்களுக்கும் நோய் பரவாது தடுக்கப்படுகின்றது.
- காசநோயாளியுடன் தொடர்புள்ளவர்கள், சிறுவர்களும் வயது வந்தவர்களும் குறிப்பாக இருமல் உள்ளவர்கள் காசநோய்க்கான பரிசோதனைகளுக்கு உட்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

***காசநோயைத் தடுக்கும் வழிகள்***

- ***முழுமையாக மருந்தை உட்கொள்வதன் மூலம் காசநோயைக் குணப்படுத்துவது***
- ***இருமும் போதும் தும்மும் போதும் மூக்கு, வாய்ப்பகுதியை மூடிக்கொள்வது***

## சமூக மட்டத்தில் காசநோயாளர்கள் நோய் நிர்ணயம் செய்யப்படுவதற்குஒர சமூகத் தொண்டர் எப்படி உதவ முடியும்?

காசநோய்க்குரிய அறிகுறிகளுடன் இருக்கும் நோயாளர்களை, சளிப்பரிசோதனைக்காக அருகில் உள்ள சுகாதார வள நிலையத்துக்கு அல்லது பரிசோதனைக்கான சளி மாதிரியை எடுத்து அனுப்புவதற்காக நுணுக்குக்காட்டி மத்திய நிலையத்துக்கு அனுப்ப முடியும்.

***நினைவிருக்கட்டும்***

***2 முதல் 3 கிழமைகள் அல்லது அதற்கு மேலான காலத்துக்கு இருக்கும் இருமல் என்பது நுரையீரல் காசநோயின் மிக முக்கிய நோய் அறிகுறியாகும்.***

## ஒரு காசநோயாளிக்கு சமூகத்தொண்டர் ஒருவர் எப்படி உதவமுடியும்?

காசநோயாளி சிகிச்சையை இடைநடுவில் கைவிட்டால் அந்த நோயாளியைத் தேடிப்பிடிப்பதிலும் மீளச் சிகிச்சைக்கு உட்படுத்துவதிலும் சுகாதார நிலைய அலுவலர்களுக்கு சமூகத்தொண்டர் உதவமுடியும்.

ஒரு நோயாளி, நேரடி அவதானிப்புச் சிகிச்சைக்காக ஒரு சுகாதார வள நிலையத்துக்கு வர முடியாதவராக இருப்பாரேயானால், சுகாதார மத்திய நிலையம் தூரமாதலால் நோயாளி அங்கு செல்வதில் சிரமங்களை எதிர் கொள்பவராக இருந்தால், அந்த வகை நோயாளிகளுக்கு சுகாதார நிலைய அலுவலரின் மேற்பார்வையின் கீழ் சமூகத்தொண்டர் ஒருவர் ''டொட்'' வழங்குனர் ஆக முடியும்.

***சுகாதார நிலைய அலுவலரின் மேற்பார்வையின் கீழ் சமூகத்தொண்டர் ஒருவர் "டொட்" வழங்குனர் ஆக செயற்படமுடியும்.***

## சிகிச்சை உதவியாளராகச் செயற்படுவதில் சமூகத்தொண்டர் வகிக்கும் பங்கு என்ன?

உமது பிரதேசத்தில் உள்ள காசநோயாளர் ஒருவர் நிர்ணயிக்கப்பட்ட முழு சிகிச்சைக் காலத்துக்கும் காசநோய்க்கான மருந்துகளை சுகாதார நிலையத்தில் இருந்தோ அல்லது உம்மிடம் இருந்தோ ஒழுங்காக உள்ளெடுப்பதை உறுதிப்படுத்துவதெ நீர் வகிக்கும் பங்கு ஆகும். சிலவேளைகளில் புரிந்து கொள்வதற்குச் சிரமமான விடயங்களை உம்மிடம் கேட்பது நோயாளிக்கு வசதியானதாக இருப்பது முக்கியமானது. கடுமையான வருத்தத்தில் இரக்கும், வைத்தியசாலை அனுமதி தேவைப்படும் நோயாளி ஒருவர் உமது அறிவுரையை நாடலாம். நோயாளி தமக்கு காசநோய் ஏற்பட்டிருப்பது பற்றி வெட்கமடைந்தவராக இருக்கக்கூடும். அவ்வேளையில் :உமக்கு நோய் குணமாகும் வரை நான் உம்முடன் இருப்பேன். என்று மீள் உறுதிப்பாட்டை வழங்கவேண்டியவராக இருப்பீர். நோயாளி ஒருவர் 2 முதல் 3 வாரங்களுக்கு மேலாகத் தொடரும் இருமலுடன் காணப்பட்டால், அவரை நோய்நிர்ணயம் செய்வதற்காகவும் சுகாதார வள நிலையத்துக்கு அனுப்பவேண்டும்.

***நோயாளி நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குரிய மருந்தை ஒழுங்காக உட்கொள்வதை உறுதிப்படுத்துவதே சிகிச்சை உதவியாளரது பிரதான பங்காகும். நோயாளி சொல்வதைக் கேட்பதும் அவரை ஊக்கப்படுத்துவதும் சிகிச்சை உதவியாளராக நீர் ஆற்றும் ஒரு பங்காகும்.***

## ஒரு "டொட்" வழங்குனர் என்ற வகையில் உமது கடமைகள் எவை?

***(காசநோய்க்கான "டொட்" வழங்குனராக எமது கடமைகள் மிக முக்கியமானவை)***

நீர் கட்டாயம்

- ✓ காசநோயாளியைச் சந்திப்பதற்கு ஓர் இடத்துக்கும் நேரத்துக்கும் உடன்பட வேண்டும். நோயாளியைக் காத்திருக்க வைக்கக் கூடாது.
- ✓ ஒவ்வொரு சந்திப்பிலும் குறிப்பிட்ட கால அட்டவணைப்படி (தினமும் அல்லது வாரத்துக்கு ஒரு தடவை) காசநோய் மருந்துகளை நோயாளிக்குக் கொடுத்தல். மருந்துகள் சரியானவையா என்று பார்த்துக் கொள்ளவும். எல்லா மருந்துகளையும் நோயாளி விழுங்குகின்றாரா என்று அவதானிக்கவும்.
- ✓ நோயாளி ஒவ்வொரு தடவை மருந்துகளை எடுக்கும் போதும் சிகிச்சை அட்டையில் பதிவு செய்யவும். (இந்தக் கைநூலின் அடுத்த பகுதியில் சிகிச்சை அட்டை விளக்கப்பட்டுள்ளது.
- ✓ ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் பற்றி கவனமாக இருக்கவும். ஓங்காளத்தைக் குறைக்க வேண்டுமெனில் மருந்துகளை உணவுடன் உண்ணும்படி நோயாளியை ஊக்குவிக்கவும். பக்க விளைவுகள் தொடர்ந்திருக்குமானால் நோயாளியை சுகாதார வள நிலையத்துக்கு அனுப்பவும்.
- ✓ நோயாளியை தொடர்ந்து சிகிச்சை பெறும் விதத்தில் ஊக்குவிக்கவும்.

- ✓ நோயாளி சிகிச்சையின் ஒரு நாளைத் தவற விட்டாலும் விரைவாகப் பிரதிபலிக்கவும். 24 மணி நேரத்துக்கு மேல் ஒரு நோயாளி மருந்து உட்கொள்ள வரவில்லையெனின் நோயாளியின் வீட்டிற்குச் செல்லவும். மருந்து உட்கொள்ள வராமைக்கான காரணத்தை அறிந்து கொள்ளவும். மருந்தைக் கொடுக்கவும். சிகிச்சையைத் தொடரும் விதத்தில் நோயாளியைச் சம்மதிக்கச் செய்ய முடியாவிட்டால், அல்லது நோயாளியைப் பார்க்க முடியாவிட்டால் காலம் தாழ்த்தாது சுகாதார நிலையத்துக்கு அறிவிக்கவும்.
- ✓ சுகாதார வள நிலையத்துக்குச் சென்று காசநோயாளியின் சிகிச்சை அட்டையைக் காண்பித்து ஒவ்வொரு மாதத்திற்குமான காசநோய் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும். நோயாளியின் நடவடிக்கை பற்றியும், பிரச்சனைகள் ஏதுமிருந்தால் அவை பற்றியும் சுகாதார அலுவலர்களுடன் கலந்துரையாடவும்.
- ✓ நீங்களோ அல்லது நோயாளியோ சில நாட்களுக்கு வெளியூர் செல்ல நேர்ந்தால், பொருத்தமான ஒழுங்குகளைச் செய்து கொள்ளவும். அல்லது மேற்கொண்டு செய்ய வேண்டியதைத் தீர்மானிக்கும் பொருட்டு நோயாளியை சுகாதார வள நிலையத்துக்கு அனுப்பவும். அக்காலகட்டத்தில் வேறு யாரையாவது மருந்துகளை வழங்கும் பொருட்டு கேட்டுக் கொள்ளலாம்.
- ✓ உரிய காலத்தில் நோயாளி தொடர் அவதானிப்பிற்கான சளிப் பரிசோதனை செய்யும் பொருட்டு சுகாதார வள நிலையத்துக்குச் செல்வதை உறுதிப்படுத்தவும்.

**நீங்கள் காசநோய் சிகிச்சைக்கான “டொட்” வழங்குனர் என்ற வகையில், நோயாளிக்கு பின்வரம் உதவிகளை வழங்கவேண்டும்.**

- ***நோயாளி எல்லா காசநோய் மருந்துகளையும் விழுங்குவதை அவதானித்தல்.***
- ***மருந்து உள்ளெடுக்கப்பட்டதும் சிகிச்சை அட்டையில் அடையாளம் இடுதல்.***
- ***நோயாளியை காசநோய் சிகிச்சைக்காக தொடர்ந்து வரும் வகையில் ஊக்குவித்தல்.***
- ***எப்பொழுதும் நோயாளிக்கு வழங்கத்தக்க போதுமான மருந்து இருப்பதை உறுதிப்படுத்தல்.***
- ***ஏதும் பிரச்சனைகள் எழுகின்ற போது நோயாளியை சுகாதார வள நிலையத்துக்கு அனுப்புதல்.***
- ***நோயாளி தொடர் அவதானிப்பு சளிப்பரிசோதனைக்காக உரிய காலத்தில் சுகாதார வள நிலையத்துக்குச் செல்வதை உறுதிப்படுத்தல்.***

## நீங்கள் எப்படி சிகிச்சை அட்டையை பயன்படுத்துவீர்கள்?

காசநோய்க்கிருமிகளைக் கொல்வதற்கு, நோயாளி கால அட்டவணைப்படி காசநோய் மருந்துகளை உள்ளெடுக்க வேண்டும். அந்த இடத்தில் நோயாளி மருந்துகளை சரியாக உள்ளெடுப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நீங்கள் உதவியும் ஆதாரமும் வழங்க வேண்டும். சரியான மருந்துகள்சரியான நேரத்தில் நோயாளிக்கு கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் காசநோய் சிகிச்சை அட்டை உங்களுக்கு உதவுகின்றது. நோயாளி மருந்துகளை, உரிய அட்டவணைப்படி விழுங்குவதை அவதானித்தலும் அவற்றை காசநோய் சிகிச்சை அட்டையில் பதிவு செய்தலும் முக்கியமானது. எல்லா மருந்துகளும் முடிவடைவதற்கு முன்னதாக காசநோய் சிகிச்சை அட்டையை நீங்கள் சுகாதார வள நிலையத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும். சுகாதார வள நிலைய உத்தியோகத்தர், காசநோய் சிகிச்சை அட்டையைப் பார்த்து நோயாளி உரிய கால அட்டவணைப்படி ஒழுங்காக மருந்து உட்கொள்வதை அவதானித்து உங்களிடம் நோயாளிக்கான அடுத்தகட்ட மருந்துகளை வழங்குவார். நோயாளி ஒவ்வாருமுறையும் மருந்தை உட்கொண்டதும் உரிய திகதியில் “√” அடையாளத்தை இடவும். மருந்து கொடக்கப்படாத நாளில் “x” அடையாளத்தை இடவும். தினமும் எல்லா மருந்துகளும் உட்கொள்ளப்படுவதை அவதானிக்கவும்.

| திகதி<br>மாதம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜீலை | | | | | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | x | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| ஆகஸ்ட் | √ | √ | √ | √ | √ | √ | √ | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| செப்ரெம்பர் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

ஒவ்வொரு நாளும் நோயாளி காசநோய் மருந்துகளை உட்கொண்டதும் காசநோய் அட்டையில் பதிவு செய்யவும்

## காசநோய்க்கான மருந்துகளை எவ்வாறு கொடுப்பீர்கள்?

நோயாளியின் ஒவ்வொரு வருகையின் போதும் ஒவ்வொரு மருந்திலும் எத்தனை எக்க வேண்டும் என்பதை சுகாதார வள நிலைய அலுவலர் உமது நோயாளிக்கான காசநோய் சிகிச்சை அட்டையில் எழுதிவிடுவார். நோயாளி உம்மிடம் வரும் போது

- நோயாளிக்கான காசநோய் சிகிச்சை அட்டையை தயாராக வைத்திருக்கவும்.
- நோயாளிக்காக ஒரு கோப்பை தண்ணீரை வார்த்துக் கொள்ளுங்கள். (ஓங்காளம் ஏற்படுகின்ற நோயாளி எனில் மருந்துகளைப் பாலுடன் உள்ளெடுக்கலாம்.
- அன்று நோயாளி உள்ளெடுக்க வேண்டிய மருந்துகளை வெளியே எடுக்கவும்.
- அந்த மருந்துகளை நோயாளியின் கையில் இட்டு ஒரே தடவையில் விழுங்குவதை அவதானிக்கவும். அவ்வாறு விழுங்குவது சிரமமெனில் ஒவ்வொன்றாக விழுங்கலாம். நோயாளி சிறிது நேரம் ஓய்வெடுக்க அவகாசம் கொடுக்கவும். காசநோய்க்கான மருந்துகளின் முறையான பயனைப் பெறுவதற்கு, அவை ஒருங்கு சேர உள்ளெடுக்கப்படுவது அவசியமானதாகும்.
- மருந்து உட்கொள்ளப்பட்டதை காசநோய் சிகிச்சை அட்டையில் பதியவும்.

## எப்படி “டொட்ஸ்” ஐ வழங்குவது?

***ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நோயாளி எல்லா காசநோய் மருந்துகளையும் விழுங்குவதை நீங்கள் கட்டாயம் அவதானிக்க வேண்டும்.***

## காசநோய் மருந்துகளால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் எவை?

காசநோய் மருந்துகளால் சிலவேளைகளில் பக்கவிளைவுகள் ஏற்படலாம் என்பதை நோயாளிக்குத் தெரிவியுங்கள். அவ்வாறு பக்கவிளைவுகள் ஏற்படும் போது நோயாளி உங்களுக்கு அவற்றைத் தெரிவிக்க வேண்டும். சில பக்கவிளைவுகள் ஆபத்தானவை அல்ல. அதனை நீங்கள் நோயாளிக்கு மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்த வேண்டும். ஏனைய பக்கவிளைவுகள் பாரதூமானவை. அதாவது, சிகிச்சையை இடை நிறுத்தி நோயாளியை உடனடியாக சுகாதார வள நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.

| பக்கவிளைவு | உமது பிரதிபலிப்பு |
|---|---|
| ஆபத்து அற்றவை<br>• ஓங்காளம், உணவில் விருப்பம் இல்லாமை, வயிற்றுநோவு.<br>• செம்மஞ்சள்/ சிவப்பு நிறமாக சிறுநீர் வெளியேறல்.<br>• மூட்டுகளில் வலி | சிகிச்சையைத் தொடரலாம்<br>• நோயாளியை ஆறுதல்படுத்தி மருந்துகளை உணவுடன் உட்கொள்ளச் சொல்லுங்கள்<br>• நோயாளியை ஆறுதல் படுத்தவும்.<br>• நோயாளியை சுகாதார நிலையத்துக்கு அனுப்புதல். |

| | |
|---|---|
| • பாதத்தில் எரிவு உணர்வு | • நோயாளியை சுகாதார நிலையத்துக்கு அனுப்புதல் |

| | |
|---|---|
| ஆபத்தானவை:<br>• தோலில் சொறி, எரிச்சல்<br>• தோல், கண்கள் மஞ்சள் நிறமாதல்.<br>• அடிக்கடி வாந்தி ஏற்படுதல்<br>• காது கேளாத நிலமை<br>• தலைச்சுற்று (கிறுகிறுப்பு)<br>• கண்பார்வைப் பிரச்சனைகள் | சிகிச்சையை இடை நிறுத்தி நோயாளியை உடனடியாக சுகாதார நிலையத்துக்கு அனுப்பவும். |

**உண்மையான மாற்றத்தை உருவாக்குவது எப்படி?**

காசநோய் மருந்துகளை சரியாக உள்ளெடுப்பதனை உறுதிப்படுத்துவதானது நோயாளி குணமடைவதற்கு உதவுகிறது. நோயாளியின் வார்த்தைகளைச் செவிமடுப்பதுடன், அவரை ஊக்கப்படுத்துவதன் மூலம் சிகிச்சையின் முழுக் காலத்தையும் பூரணப்படுத்த வேண்டும். காசநோய்க்கான மருந்துகளை நோயாளி சரியாக உள்ளெடுப்பாரேயானால் அது குடும்ப அங்கத்தவர்களுக்கும் சமூக அங்கத்தவர்களுக்கும் நோய் பரவுவதைத் தடுக்க உதவுவதாக இருக்கும்.

***காசநோயாளி குணமடைவதற்கும், குடும்பத்திலும், சமூகத்திலும் காசநோய் பரவதைத் தடைசெய்வதற்கும் "டொட்ஸ்" வழங்குனர் உதவி செய்கின்றார்.***

## முக்கிய தகவல்கள்

1. காசநோயானது பக்டீரிய நுண்கிருமிகளால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும். சுவாசப்பையில் காசநோய் உள்ள ஒருவரிடமிருந்து நோய் பரவுகிறது.
2. சுவாசப்பையில் காசநோய் உள்ளவர், இருமும் போது அல்லது தும்மும் போது அடுத்த மனிதர்களுக்கு நோய் பரப்பப்படுகிறது.
3. இருமும் போதும் அல்லது தும்மும் போதும் மூக்கு வாய்ப்பகுதியை மூடிக்கொள்ளும்படி நோயாளியைக் கேட்டுக் கொள்ளுங்கள்.
4. காசநோய் ஏற்பட்டுள்ளவர்கள் வேறுபட்ட நோய் அறிகுறிகளை உடையவர்களாக இருப்பர். நுரையீரலில் காசநோய் ஏற்பட்டவர்களுக்கு 2முதல் 3கிழமைக்கு மேல் தொடர்கின்ற இருமல் பிரதான அறிகுறியாகும். அவ்வாறானவர்கள் பரிசோதனை செய்து கொள்வதற்காக சுகாதார வள நிலையத்துக்குச் செல்வது சிறந்தது.
5. காசநோயாளி ஒருவர் தமக்கு சிபார்சு செய்யப்பட்ட காசநோய்க்கான மருந்துகளை ஒழுங்காக, நாள் தவறாமல் முழுமையான சிகிச்சைக் காலத்துக்கு உள்ளெடுப்பது கஷ்டமானதாகும். அல்லாது விடில் நோய் சுகப்படுத்த முடியாததாகிவிடும்.
6. காசநோய்க்கான சிகிச்சையை மேற்கொண்டு குணமடைவதும் இருமும் போதும் தும்மும் போதும் மூக்கு வாய்ப்பகுதியை மூடிக்கொள்வதும் காசநோய் பரவுதலைத் தடுக்கும் என்பதை நோயாளிக்குச் சொல்லுங்கள்.
7. காசநோயாளி ஒருவர் காசநோய்க்கான மருந்துகளை ஒழுங்காக ஒவ்வொருநாளும் சிகிச்சையின் முழுக்காலத்துக்கும் உள்ளெடுப்பதை உறுதிப்படுத்துவதும் சிகிச்சையை பூரணப்படுத்தும் வகையில் நோயாளியை ஊக்கப்படுத்துவதும் டொட்ஸ் வழங்குனரின் பிரதான கடமையாகும்.
8. டொட்ஸ் வழங்குனராக நோயாளிக்க பின்வரும் வகையில் உதவியாக இருக்க முடியும்.
    - நோயாளி எல்லா மருந்துகளையும் விழுங்குவதை அவதானிப்பது.

- நோயாளி மருந்துகளை உள்ளெடுத்ததும் காசநோய் சிகிச்சை அட்டையில் பதிவு செய்தல்.
- காசநோய் சிகிச்சைக்காக தொடர்ந்த வரும் வகையில் நோயாளியை ஊக்குவித்தல்.
- எப்பொழுதும் நோயாளிக்குரிய மருந்து வழங்கல் இருப்பதை உறுதிப்படுத்தல்.
- ஏதும் பிரச்சனைகள் இருக்கின்ற பட்சத்தில் நோயாளியை சுகாதார வள நிலையத்துக்கு அனுப்புதல்.
- தொடர் அவதானிப்பிற்கான சளிப் பரிசோதனைக்காக நோயாளி உரிய காலத்தில் சுகாதார வள நிலையத்துக்குச் செல்வதை உறுதிப்படுத்தல்.

9. காசநோய்க்கான மருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். அவ்வாறான பிரச்சனைகள் எழும் பட்சத்தில் நோயாளி உங்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அவ்வாறான நிலையில் நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்கலாம்.
10. காசநோயாளி ஒருவர் சுகமடைவதற்கும் அதனால் கடும்ப அங்கத்தவர்களிடையேயும் சமூகத்திலும் காசநோய் பரவுவதைத் தடுப்பதிலும் ‘‘டொட்ஸ்’’ வழங்குனர் உதவுகின்றார்.